நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.186/2019

**2021ம் ஆண்டு நவம்பர்** திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சமோஜா | வயது: | 55 |
| த/பெ.(அ)க.பெ | கார்த்திகேயன் | தொழில்: | கூலி |
| ஊர் : | பாப்பானூர் | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பாப்பானூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தமிழ்ச்செல்வன் எனது பேரன் ஆவார். 2018 ம் வருடம் 7வது மாதம் 5ந் தேதி காலை 9.00 மணியளவில் என் வீட்டிற்கு தமிழ்ச்செல்வன் மற்றும் நித்திஷ்குமார் வந்து மீண்டும் திருப்பத்துார் செல்லும் போது தமிழ்ச்செல்வன் வண்டியை ஓட்டிக்கொண்டும், நித்திஷ்குமார் பின்னால் அமர்ந்து கொண்டும் சென்றனர்.அப்போது பாப்பானூர் கூட்ரோட்டில் லாரி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். தமிழ்ச்செல்வனுக்கு தலைமண்டையில் அடிப்பட்டிருந்தது. நித்திஷ்குமாருக்கும் அடிப்பட்டிருந்தது.பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் இருவரையும் திருப்பத்தார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். நித்திஷ்குமார் இறந்துவிட்டதாகவும், தமிழ்ச்செல்வனை வேலூர் மருத்துவமனைக்கும் பரிந்துரை செய்தனர். தமிழ்ச்செல்வனை வேலூர் செல்லும் வழியில் ஆம்பூரில் இறந்துவிட்டார். திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்தனர். போலீஸார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

சம்பவத்தை நான் நேரடையாக பார்க்க்வில்லை என்றால் சரிதான். தகவல் தெரிந்து தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை பற்றி நேரடையாக தெரியாது என்றும், போலீஸார் சொன்னதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.186/2019

**2021ம் ஆண்டு நவம்பர்** திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேல் | வயது: | 42 |
| த/பெ.(அ)க.பெ | கோவிந்தசாமி | தொழில்: | மேஸ்திரி |
| ஊர் : | சி.கே.சி.தியேட்டர் | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் திருப்பத்தூர் சி.கே.சி. தியேட்டர் அருகில் குடியிருந்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நித்திஷ்குமார் எனது அக்கா மகன் ஆவார். 05.08.2018ந் தேதி 9.00 டு 9.30 மணியளவில் விபத்து நடந்ததாகவும், அதில் நித்திஷ்குமார் மற்றும் அவரது நண்பர் தமிழ்ச்செல்வன் இருவருக்கும் அடிப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனக்கு 10.00 மணியளவில் தகவல் கிடைத்தது. நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனை வந்து பார்த்த போது நித்திஷ்குமார் இறந்துவிட்டார். தமிழ்ச்செல்வன் மேல்சிகிச்சைக்காக வேலூர் செல்லும் போது வழியில் இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். எனது அக்கா மகன் நித்திஷ்குமார் மற்றும் தமிழ்ச்செல்வன் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:-

சம்பவத்தை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.கேள்விப்பட்டு தான் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

ம.வி:- இல்லை

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.186/2019

**2021ம் ஆண்டு நவம்பர்** திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முரளி | வயது: | 42 |
| த/பெ.(அ)க.பெ | சுப்பிரமணி | தொழில்: | எலக்ட்ரிசியன் |
| ஊர் : | வெங்களாபுரம் | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் திருப்பத்தூர் வெங்களாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நித்திஷ்குமார் எனது அக்கா மகன் ஆவார். கடந்த 2018ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில்லை. காலை 9.00 டு 9.30 மணியளவில் விபத்து நடந்ததாகவும், அதில் நித்திஷ்குமார் மற்றும் அவரது நண்பர் தமிழ்ச்செல்வன் இருவருக்கும் அடிப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனக்கு 10.00 மணியளவில் தகவல் கிடைத்தது. நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனை வந்து பார்த்த போது நித்திஷ்குமார் இறந்துவிட்டார். தமிழ்ச்செல்வன் மேல்சிகிச்சைக்காக வேலூர் செல்லும் போது வழியில் இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். எனது அக்கா மகன் நித்திஷ்குமார் மற்றும் தமிழ்ச்செல்வன் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:-

சம்பவத்தை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.கேள்விப்பட்டு தான் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது.

ம.வி:- இல்லை

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.186/2019

**2021ம் ஆண்டு நவம்பர்** திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | வயது: | 24 |
| த/பெ.(அ)க.பெ | ஜெகன்நாதன் | தொழில்: | டிரைவர் |
| ஊர் : | ஜோல்லகவுண்டனூர் | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் ஜோல்லகவுண்டனூரில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நித்திஷ்குமார் எனது சித்தப்பா மகன். எனது தம்பி. விபத்தில் இறந்து போன தமிழ்ச்செல்வன் எனது அக்கா மகன். 05.08.2018ந் தேதி 9.00 மணி டு 10.00 மணிக்குள்ளாக நித்திஷ்குமார் மற்றும் தமிழ்ச்செல்வன் இருவரும் தமிழ்ச்செல்வனின் இருசக்கரவாகனமான ஸ்பெலன்டர் ப்ளஸ் வாகனத்தில் ஜோல்லக்கவுண்டனூாரிலிருந்து பாப்பானூர் வரும் வழியில் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக போன் மூலம் தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்றேன் அங்கு இருவரையும் ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். பிறகு திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்த போது நித்திஷ்குமார் இறந்துவிட்டார். தமிழ்ச்செல்வனும், மேல்சிகிச்சைக்காக செல்லும் வழியில் ஆம்பூரில் இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்தி வாகனத்தின் ஓட்டுநர் குறித்து எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தனரா என்று நினைவில்லை.

எ.த.கு.வி:-

சம்பவத்தை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.கேள்விப்பட்டு தான் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது.

ம.வி:- இல்லை